பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

# The Hero - Stone Cult in the Namakkal Region

**K. Dharshika,** Research Scholar of Tamil, PSGR kirshnammal college for women, Coimbatore, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0000-1010-8005**
**Dr. J. kavitha,** Assistant Professor of Tamil, PSGR kirshnammal college for women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985**
**DOI: 10.5281/zenodo.20840260**

## Abstract

*For folklore, Na. Vanamamalai uses the term' naattar vazhakkaaru' – meaning the customary practices of common people. He says we should study the life and environment of ordinary people through this lens. D. Lourdu defines folklore as oral transmission, tradition-bound, without a known author, and shared by a group. Folklore includes many customary practices. These include beliefs, rituals, proverbs, riddles, games, stories, and narrative songs. People believe that a divine power beyond themselves exists. Each community follows its own way of worship. If good comes, they say it is from the deity. If bad comes, they also say it is from the deity. Thus, folk people hold deep faith in the divine. They have followed nature worship, ancestor worship, and the worship of a single outstanding person in the community. For those who died a heroic death, the hero-stone (nadukkal) is worshipped. This practice means placing ancestors and heroes who lived well or died heroically in a high position and worshipping them. Nevertheless, the purpose of this study is to examine how the hero-stone tradition, which was followed in the time of Tolkappiyar, continues to exist in the culture of the people of the Namakkal region today.*

**Keywords:** Center Stone, Roof Tiling, Making Arrangements, Mala Temple, Culture, Worship, Faith, Prayer, Arundhatiyar**.**

### Field Work Informants

**[1]** Duraisamy, C. (age 60, farmer, Namakkal). Personal interview.
[2] Kuppan, C. (age 68, farmer, Tiruchengode). Personal interview.

### References

[1] Paramasivan, Tho. *Theivam Enpathor*. Kalappai Pathippagam.
[2] Venkatasami Nattar, Na. Mu. *Agananooru Moolamum Uraiyum*. Gowra Pathippagam.
[3] Puliyur Kesikan. *Purananuru Moolamum Uraiyum*. Saratha Pathippagam, Chennai, 2010.
[4] Thirugnanasambandham. *Tholkappiyam Porulathikaram*. Kathir Pathippagam.
[5] Seenivasan, Ra. *Silappathikaram Moolamum Thiranayvum*. Aniyagam Pathippagam, Chennai, 1998.
[6] Shanmugasundaram, Su., and Perumal Murugan. *Namakkal Theivangal*. Kavya Pathippagam, Chennai.
[7] Chandrasekaran, Ira. *Nattuppura Vazhipattu Marapugal*. 1st ed., Makkal Achagam, Chennai, 2002.
[8] Marku. *Arunthathiyar Vazhum Varalaru*. Thamizhini Veliyedu.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*
29
**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# நாமக்கல் வட்டார நடுகல் வழிபாட்டுமுறை

**கா.தர்ஷிகா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு , இந்தியா.
**ORCiD: ORCiD: https://orcid.org/0009-0000-1010-8005**
**முனைவர் ஜெ.கவிதா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு , இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985**

**ஆய்வுச் சுருக்கம்**

*நாட்டுப்புறவியல் என்பதற்கு ‘நாட்டார் வழக்காறு’ என்ற சொல்லைப் பயன்படுத்தி, சாமானிய மக்களின் வாழ்வியல் சூழலை ஆய்வு செய்ய வேண்டும் என்று நா. வானமாமலை கூறுகிறார். நாட்டார் வழக்காற்றியலை வாய்மொழியாகப் பரப்பப்படுவது, மரபு வழிப்பட்டது, ஆசிரியர் அற்றது, குழுவினரால் பகிரப்படுவது என தே.லூர்து வரையறுக்கிறார். நாட்டுப்புறவியல் என்பது மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், பழமொழி, விடுகதைகள், விளையாட்டுகள், கதைகள், கதைப்பாடல் போன்ற பல்வேறு வழக்காறுகளை உள்ளடக்கியது ஆகும். மக்கள் தங்களை மீறிய ஒரு சக்தி தெய்வத்திற்கு உள்ளது என்று நம்பி ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான வழிபாட்டு முறைகளைச் செய்து வருகின்றன. மக்களுக்கு நன்மை வந்தால் தெய்வத்தால் வந்தது என்றும் தீமை வந்தால் தெய்வத்தால் வந்தது என்றும் தெய்வத்தின் மீது நாட்டுப்புற மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தன. இயற்கை வழிபடுதல் முன்னோர்களை வழிபடுதல் மற்றும் சமுதாயத்தில் சிறந்து விளங்கிய ஒரே தெய்வமாக போற்றுதல் ஆகியவற்றை மக்கள் பின்பற்றி வந்தனர். வீர மரணம் அடைந்தவர்களுக்கு நடுகல் வழிபாட்டு முறை பின்பற்றப்படுகிறது. மூதாதையர்கள் மற்றும் வீரர்களின் வழிபாடு என்பதை பெரும்பாலும் மக்களில் வாழ்ந்து சிறப்பான செயல்களைச் செய்து அல்லது வீர மரணம் அடைந்த முன்னோர்களை உயர்நிலையில் வைத்து வழிபடுவது நடுகல் வழிபாட்டு முறைகும். தொல்காப்பியர் காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த நடுகல் நாமக்கல் வட்டார மக்களின் பண்பாட்டில் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்வதே, இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** நடுகல், கூரை சோறிடுதல், ஈடுமுறை செய்தல், மாலா கோயில், பண்பாடு, வழிபாடு, நம்பிக்கை, வேண்டுதல், அருந்ததியர்.

**முன்னுரை**

நாமக்கல் மாவட்டம் பழங்காலத்தில் ஆரைக்கால் என பெயர் பெற்றிருந்தது. சோழர் காலத்தில் இவர் திருவாரைக்கல் என்றும் வழங்கப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் பதிவு செய்துள்ளன. இவ்வூர் ஆரைக்கல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ‘ஆரை’ என்பதற்கு ‘மதில்’ என்றும் ‘நாமம்’ என்றும் பொருள். ஆகவே ஆரைக்கால் நாமக்கல் என்று வழங்கப்பட்டது. நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் இயற்கை மையப்படுத்தி காவல் தெய்வங்களை வணங்குவதை நோக்கமாகக் கொண்டவை. நாட்டார் தெய்வங்களை வணங்குவதையும் நோக்கமாகக் கொண்டவை ஆகும் நாட்டார் தெய்வங்கள் சாமி ஆட்டம் குருதிப்பலி மற்றும் கிராம தேவதைகள் குறித்து மூடநம்பிக்கை பிம்பங்களை உடைத்து அவற்றின் சமூக உளவியல் பின்னணியை விளக்குகிறது என்று தொ. பரமசிவன் எழுதிய, “தெய்வம் என்பதோர்” என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். ‘வழிபடு’மற்றும் ‘வழி’ என்ற

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

வேர்ச்சொல்லில் இருந்து வழிபாடு என்ற சொல் பிரிந்தது. வழிபாடு என்ற சொல்லுக்கு வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை என்ற பல பொருள் தமிழ்பேரகராதி கூறுகின்றது. வழிபாடு என்பதற்கு அருச்சித்தல் பங்கெடுத்தல் தீபம் கொட்டுதல் என்று தொகை அகராதி கூறுகின்றது. வணக்கம் என்னும் சொல்லை செந்தமிழ் அகராதி கூறுன்கிறது. வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்விலிருந்தும் குற்ற உணர்விலிருந்தும் இருந்தும் உண்டாகி இருப்பதாக சிக்மன்ட் பிராய்ட் கூறுகிறார்.

**சங்க இலக்கியத்தில் நடுகல்**

சங்க நூல்களில் முப்பதிற்கும் மேற்பட்ட நடுகல் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இருபது பாடல்களே மூன்றாம்கட்டத்தைச் சார்ந்தவை. ஓவியம், உருவங்களுடன் கூடிய நடுகற்கள், கல்திட்டை, கல்பதுக்கை, குகை ஓவியங்கள் ஆகியவை இக்காலகட்டத்தில் பெருகின என்பர். நடுகல்லாய் மாறிய வீர்களுக்குச் சடங்குகள் ஏற்படுத்தப்பட்டதை,

**முனைஆத் தந்து முரம்பின் வீழ்ந்த**
**வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவா**
**வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளோடு துரூஉப்பலி கொடுக்கும்**
**போக்குஅருங் கவலைய புலவுநாறு அருஞ்சுரம் (அகம்., பா. 35)**

வெட்சி வீரராகிய மறவர்கள் போர்முனையிலேயே வென்று பசுக்களை மீட்டனர். அவ்வெட்சியாரைக் கரந்தை வீரர்கள் மேட்டு நிலத்திலே வீழ்த்தித் தம் வெற்றியைக் கொண்டாடினர். போர்க் களத்தில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு, அந்நடுகல்லுக்கு மயிலின் தோகைகளைச் சூட்டினர். துடியினை முழங்கினர். நெல்வால் ஆகிய கள்ளோடு செம்மறியாட்டுக் குட்டியையும் பலி கொடுத்தனர் என்பதை இப்பாடல் வழி புலனாகிறது.

**புறநானூற்றில் நடுகல் வழிபாடு**

**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறு ஏந்துமருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே ப்ரவின் அல்லது நெல்லு குத்துப் பரவும் கடவுளும் இலவே (புறம்., பா. 335)**

மேற்கண்ட பாடல் வரிகளில் பகைவர் படைகளின் முன்னின்று மேலதிர் வராதவாறு தடுத்து அவர் கொல்களிற்றை வென்று, தாமும் வீழ்ந்து நடுக்கல்லாகினவரின் நடுக்கடலை தொழுவது இன்றி நெல்லும் பூவும் சொரிந்து வழிபடச் சிறந்த கடவுளும் வேறு எதுவும் கிடையாது என்று புறம் வழி அறியப்படுகின்றது குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொல்காப்பியத்தில் நடுகல் வழிபாடு முறை**

காட்சி கால்கோள் நீர்படை நடுகல்
சீர்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் (தொல். புறம்., 63)

**காட்சி**

கரந்தைப் போரில் உயிர் துறந்த வீரரை நடு கல்லில் நிறுத்தி வழிபாடு செய்வதற்குரிய கல்லை தேர்ந்தெடுத்தனர்.

**கால்கோள்**

நடுகல்லுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லை கைகோடல் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

**நீர்படை**

தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லை நீரிலிட்டு கழுவி தூய்மைப்படுத்துதல் நீர் படையாகும்.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**நடுகல்**

கல்லினை நடுவதற்காக தேர்ந்தெடுத்த ஓர் இடத்தில் நல்ல நாளின் நடுதலே நடுகல்லாகும்.

**பெரும்படை**

கல்லிற்குத்தக்க தக்க மரபினை உடைய கோயில் அமைத்து வழிபாடு செய்யும் முறையை பெரும்படையாகும்.

**வாழ்த்துதல்**

நடுகல்லை தெய்வமாக போற்றி வழிபாடு செய்தல் முறையையும் அதற்கு கடவுளை வாழ்த்திப் பாடுதலும் வாழ்த்துதல் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**ஐங்குறுநூற்றில் நடுகல்**

**“விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர் எழுத்துடை நடுகிஅல் அன்ன விழுப்பிணர்ப் பெருங்கை யானை இருஞ்சினம் உறைக்கும் வெஞ்சுரம் அரிய என்னார் வந்தனர் தோழிநம் காதலோரே” (ஐங்குறு, பா. 352)** என்ற பாடலில்தோழி, வில்லாற்றல் மிக்க மறவர் வில்லில் அம்பு விடத் தொலைந்தவருக்கு பெயர் எழுதி நடப்பட்ட நடுகல் போலச் சுற்றிக்கொண்டிருக்கும் குடிகளை அறுக்கும் யானை தோற்றமளிக்கும் காட்டு வழியில் சென்ற காதலர் வந்துள்ளார் என்று ஐங்குறுநூற்று பாடல் வழி குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிலப்பதிகாரத்தில் நடுகல் வழிபாடு**

**குற்றக் குரவையும் ஒன்றினை அனைத்துடன்**
**காட்சி கால்கோள் தீர்ப்பை நடுகல் (சிலம்பு, பா. 83-84)**

உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து உயிர் துறந்த சான்றோர்களுக்கு நடு கல் எடுப்பது போலவே கற்புக்கடம் பூண்டு உயிர்த்துறந்த பத்தினி பெண்ணாகிய மகளிர்க்கு நடுகல் நிறுவி வழிபடும் மரபு பண்டை காலத்தில் இருந்துள்ளது. கற்புடைய தெய்வமாகிய கண்ணகிக்கு சேர மன்னன் ஆகிய செங்குட்டுவன் இமயமலையில் இருந்து எடுக்கப்பட்ட கல்லினை கங்கை ஆற்றில் நீராடி அக்கல்லில் சிலை செய்து பத்தினிக்கோட்டம் அமைத்து வழிபாடு செய்தான். என்பதனை சிலப்பதிகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் நடுகல்**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் கொல்லப்பட்டி, மாரப்பம்பாளையம், மூலப்பாளையம், மானத்தி, கோவில்பாளையம், எலச்சிபாளையம், கரட்டுப்பாளையம், மாவு ரெட்டிப்பட்டி, மாணிக்கம் பாளையம், கூப்பிட்டாம் பாளையம் போன்ற கிராமங்களில் நடுகல் வழிபாடு பின்பற்றப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் அருந்ததியர் இனத்தில் நடுக்கல் வழிபாடு பின்பற்றப்பட்டு வருகிறது என்பதனை கல ஆய்வு மூலமாக தகவலாளி சீ. துரைசாமி என்பவர் கூறுகிறார்.

**நடுகல் பயன்பாட்டுமுறை**

ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு கூரை சோறிடுதல் நிகழ்வு நடைபெறும் பிறகு பங்காளிகள், உறவினர்கள், ஊர் பெரிய தனத்துக்காரர்கள் ஒன்று சேர்ந்து மாலா கோவிலுக்கு (நடுகல் நடும் இடம்) செல்லும் வழியில் முதலில் எந்தக் கல்லை தேர்வு செய்கிறார்களோ அதே கல்லில் தான் நடுவார்கள் மற்றவர்கள் அதைவிட நல்ல கற்களை எடுத்தாலும் அதை நடமாட்டார்கள். கல்லின் இறந்தவரின் பெயர், பிறப்பு, இறப்பு, ஊர் பெயர் முதலியவற்றை கல்லில் செதுக்கி கல்லினை நடுகிறார்கள். கருங்கல், கிரானைட், மார்பில்ஸ், முதலான கற்களையும்தற்போது வழக்கத்தில் பயன்படுத்தி நட்டு வருகின்றனர். நடு கல்லை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து சீகைக்காய், திருமஞ்சனம், பழங்கள், நல்லெண்ணெய்,

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

ஆகியவற்றை தேய்த்து குளிப்பாட்டி திருநீற்பட்ட இட்டு மஞ்சள் குங்குமம் வைத்து கல்லை கீழே கிடத்துவர். கல் நடுமிடத்தை தேர்வு செய்து கடப்பாரையில் தோன்றி கையால் மண்ணை அள்ளுவார்கள். மம்முட்டியை பயன்படுத்த மாட்டார்கள் கல் நடும் முன் குழிக்குள் நாணயங்களை வைத்து கல்லை ஐந்து அல்லது ஏழு பேர் சேர்ந்து நடுவார்கள் என்பதை முனைவர் சு சண்முகசுந்தரம் அவர்கள் நாமக்கல் தெய்வங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**மாலா கோவிலில் நடுகல் வழிபாட்டு முறை**

இறந்தவர்களின் நினைவாக கல் நடுமிடத்தினை மாலா கோவில் என்று மக்கள் கூறுகின்றார்கள். மாலா கோவில் கூரைவிட்டு ஒதுக்குப்புறமான புறம்போக்கு நிலங்களில் ஊருக்கு நேராக இல்லாமல் வடபுறமாகவோ அல்லது தென்புறமாகவோ அமைந்திருக்கும் என்பதனை கள ஆய்வு மூலமாக தகவலாளி சீ. குப்பன் என்பவர் கூறுகிறார்.

**ஈடுமுறை செலுத்துதல்**

பொருள்கள் ஏதாவது திருட்டு போனாலும், பகை காரணமாகவும் மாலா கோவிலில் ஈடுமுறை போடுவார்கள் மாலா கோவிலின் மரத்தில் கோழியை பலியிடுவார் மாலா கோவிலில் நடுகல்லை கும்பிட்டால் கட்டாயம் பலிக்கும் என்று நாமக்கல் வட்டார மக்களிடத்தில் நம்பிக்கை உள்ளது என்பதை முனைவர் சு சண்முகசுந்தரம் கூறுகிறார்.

**வேண்டுதல் வைக்கும் முறை**

இக்கோயிலில் ஊர் தர்மகர்த்தா, பூசாரி, பெரிய தனத்துக்காரர்கள் முன்னிலையில் வேண்டுதல் வைக்கப்படுகின்றது. வேண்டுதல் வைத்து அடுத்த ஆண்டு நிறைவேறும். நிறைவேறிய பிறகு தெருக்கூத்தும், வேட்டி, சேலை வைத்து வழிபாடு செய்கிறார்கள் என்பதை நாமக்கல் தெய்வங்கள் என்ற நூலில் சு சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

**சிறு தெய்வ வழிபாட்டில் நடுகல்**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் சிறு தெய்வ வழிபாடு என்பது மக்களின் வாழ்வோடு இணைந்து காணப்படுகிறது. பெரும்பாலும் ஆண் தெய்வங்களே சிறுதெய்வ வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆண்களில் சிலர் வீர தீர செயல்களில் ஈடுபட்டு தங்களின் குடியையும் குலத்தையும் தங்கள் உயிரை கொடுத்து பகைவர்களிடமிருந்து பாதுகாக்கிறார்கள். இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்களை பிற்காலத்தில் சிறு தெய்வங்களாகவும் கிராம மக்களால் வழிபடுகின்றார்கள் என்பதை நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள் என்ற நூலில் முனைவர் இரா.சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

**அருந்ததியர்களின் முன்னோர் வழிபாடு**

பொதுவாக அருந்ததியர்கள் வழிபாட்டாலும் சில சமயங்களிலும் முன்னோர்களை மட்டும் சிறப்பாக நினைத்து வழிபாடு செய்கின்றனர் . முன்னோர்கள் வழிபாட்டை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று இறந்த ஒவ்வொருவரையும் அவர் இறந்த நினைவு நாள் என்று சிறப்பாக நினைத்து வழிபடுவதும் மற்றொன்று இறந்த அனைவரையும் மொத்தமாக ஒரே நாளில் நினைத்து வழிபடுவதும் வழக்கமாக உள்ளது. அருந்ததியர் இன மக்களின் முன்னோர் வழிபாட்டில் கல்நடும் நிகழ்வு நடைபெறுவதாக அருந்ததியர் வாழும் வரலாறு" என்ற நூலில், மாற்கு கூறியுள்ளார்.

**முடிவுரை**

நடுகல் வழிபாடு செய்யும் இடத்தை மாலா கோவில் என்று நாமக்கல் வட்டார மக்கள் கூறுகிறார்கள். மாலா கோவிலில் வேண்டுதல் வைத்தால் நிச்சயம் நடைபெறும் என்று மக்களிடத்தில் மிகுந்த நம்பிக்கை உள்ளது. மாரியம்மன் திருவிழா கொண்டடுவது போல இறந்தவர்களை தெய்வமாக நினைத்து வருடாந்தோறும் விழா கொண்டாடப்படுகின்றனர்.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

இறந்து போன முன்னோர்கள் தம் சந்ததியினருக்கு எந்த குறையும் வராமல் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையில் வழிபாடு செய்து வருகின்றனர். இதனையே தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் நடுகல் வழிபாட்டு முறையினைப்பற்றியும் அதனோடு தொடர்படுத்தி நாமக்கல் வட்டார மக்களின் பண்பாட்டில் நடுகல் வழிப்பாட்டுமுறை உள்ளது என்பதனை இக்கட்டுரை வழி விளக்குகின்றது.

**கள ஆய்வு தகவலாளிகள்**

[1] தகவலாளி பெயர்.சீ. துரைசாமி , வயது. 60, ஊர். நாமக்கல், தொழில். விவசாயம்.
[2] தகவலாளி பெயர்.சீ. குப்பன், வயது.68, ஊர். திருச்செங்கோடு , தொழில். விவசாயம்.

**குறிப்புகள்**

[1] பரமசிவன், தொ. *தெய்வம் என்பதோர்.* கலப்பை பதிப்பகம்.
[2] வேங்கடசாமி நாட்டார், ந. மு. *அகநானூறு மூலமும் உரையும்.* கௌரா பதிப்பகம்.
[3] கேசிகன், புலியூர். *புறநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
[4] திருஞானசம்பந்தம், சி. *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* கதிர் பதிப்பகம்.
[5] சீனிவாசன், ரா. *சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும்.* அணியகம் பதிப்பகம், சென்னை, 1998.
[6] சண்முகசுந்தரம், சு., மற்றும் பெருமாள் முருகன். *நாமக்கல் தெய்வங்கள்.* காவ்யா பதிப்பகம், சென்னை.
[7] சந்திரசேகரன், இரா. *நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள்.* மக்கள் அச்சகம், சென்னை, 2002.
[8] மாற்கு. *அருந்ததியர் வாழும் வரலாறு.* தமிழினி வெளியீடு.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி**: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.